# ● வவுனியாப் பகுதியில் புக்காரா அனர்த்தம்: பாடசாலை உட்பட பல வீடுகள் முற்றாகச் சேதம்

(வவுனியா)

வவுனியா மருதோடையில் இரு புக்காரா விமானங்கள் நேற்றுக் காலை மேற்கொண்ட அகோர குண்டுத் தாக்குதலில் மருதோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையுட்பட பல வீடுகள் முற்றாக சேதமடைந்தன.

நேற்றுக்காலை 7-40 மணியளவில் இப்பகுதியை வட்டமிட்ட இவ்விமானங்கள் மூன்று பாரிய குண்டுகளையும் 13 க்கும் மேற்பட்ட ரொக்கட் தாக்குதலையும் நடாத்தியுள

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 25 இதழ் 82
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 08 — 05 — 1993

## விஜேதுங்க ஜனாதிபதியாக போட்டியின்றி தெரிவு

(கொழும்பு)

பிரதமர் டி. பி. விஜேதுங்க நாடாளுமன்றத்தில் நேற்று புதிய ஜனாதிபதியாக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். ஜனாதிபதி பதவிக்கு எதிர்க்கட்சிகள் உட்பட வேறு எவரும் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்யவில்லை. இதனால் அவர் போட்டியின்றி இப்பதவிக்கு தெரிவானார்.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் திரு. விஜேதுங்கவின் பெயரை பிரேரித்தார். நீதி உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழர்பிரச்னைக்கு தீர்வுகாண பிரபாகரனுடன் பேசத்தயார்!

## ஜனாதிபதி விஜேதுங்க தகவல்

(கொழும்பு

தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் நேரடியாகவே பேச்சு வார்த்தை நடாத்தத் தயாராகஉள்ளேன். பேச்சுவார்த்தைக்கான கதவுகள் இன்னமும் திறந்தே உள்ளன. இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண திரு. பிரபாகரனுடன் பேசியே முடிவு காணமுடியும்.

ஜனாதிபதியாக நேற்றுபதவியேற்ற திரு. டி. பி. விஜேதுங்க பத்திரிகையாளர்களிடம் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் பத்திரிகையாளரிடம் மேலும் தெரிவிக்கையில், தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு சமாதான பேச்சுக்களை விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவருடன் நேரடியாக மேற்கொள்ள நான் விரும்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு பிரச்னையே இன்று முக்கிய பிரச்னை

(கொழும்பு)

இந்த நாட்டில் இதுவரை தீர்க்கப்படாமல் இருக்கும் வடக்கு - கிழக்குப் பிரச்னைக்கு உடன் தீர்வு காணப்படவேண்டும். இதுவே முக்கிய பிரச்னை. இதனை நான் நன்கு உணர்ந்துள்ளேன் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க நாட்டு மக்களுக்கு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இதுவரை தீர்க்கப்படாமல் இருக்கும் வடக்கு-

(4ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவின் சிபார்சை எதிர்பார்த்திருக்கிறேன்

(கொழும்பு

இனப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் சிபார்சுகளை எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்ற கூட்டத்தில் உள்ளூர், வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியில்

(4-ம் பக்கம் பார்க்க

## அரசியலமைப்பை மாற்றுமாறு எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதிக்கான தேர்தல்கள் விரைவில் நடாத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலம் முடியும் வரையில் புதிய ஜனாதிபதியின் ஆட்சி நீடிக்கலாம் என்ற அரசியல் அமைப்பை மாற்றவேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. (ஸ)

## ஹேமா அரசியலில் குதிப்பார்

### ஜனாதிபதி பதவி அவரது இலக்கு?

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் பாரியார் திருமதி ஹேமா பிரேமதாசா விரைவில் அரசியலில் குதிப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

திருமதி பிரேமதாசா அரசியலில் சாதாரண இடத்தை கண்வைத்திருக்கவில்லை தனது கணவர் வகித்த ஜனாதிபதி பதவியைப் பெற அதற்குப்

(4-ம் பக்கம் பார்க்க)

## ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமனம்

(கொழும்பு)

புதிய பிரதம மந்திரியாக திரு. ரணில் விக்கிரமசிங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாட்டில் இதுவரை பிரதமர் பதவி வகித்தவர்களில் இவர் வயதில் மிகவும் இளையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாற்பத்திநாலு வயதான இவர் கொழும்பு றோயல்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் மாற்றம் இல்லை

## சபை முதல்வராக விஜயபால மெண்டிஸ் நியமனம்

(கொழும்பு)

நாடாளுமன்றசபைமுதல்வராக இதுவரையில் கடமையாற்றிய ரணில் விக்கிரமசிங்க நேற்று பிரதமராக பதவியேற்றதையடுத்து போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் சபை முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளையில் 22 அமைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். - பிரேமா ஆட்சியால் நாடு இக்கட்டான நிலையில் தத்தளிப்பு - சிறிமா

(கொழும்பு)

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரமேதாசாவின் ஆட்சியிலும், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியிலும் நாடுபெரும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைவி திருமதி

(4-ம் பக்கம் பார்க்க)

## அவசர கால நிலை நீக்கப்படவேண்டும்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

அவர் தமது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது:

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி பூநகரி படகுச் சேவை இன்று 08-ம் திகதி சனிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறுமென தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித்துறை அறிவித்துள்ளது.

(ஸ)

## ஸ்கொட் லண்டன் திரும்பியது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் படுகொலை தொடர்பான விசாரணை நடாத்த இலங்கை வந்த ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசார் தமது விசாரணைகளை முடித்துக்கொண்டு நேற்று லண்டன் திரும்பினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆங்கில கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (கி-86)

### அறிவுக் களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் - 11 ஆவது இதழ் விற்பனையாகிறது. 4, 5, 6, 7, 8, 9, 10 ஆவது இதழ்களும் சில பிரதிகள் கைவசமுண்டு. ஒரு பிரதி விலை ரூபா 10/- ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (ஏ-3108)

### ஏழரைச் சனி எட்டில் குரு

மேற்படி தோஷம் வெள்ளி திசையில் ஏற்படுவதால் ஜனாதிபதிக்கு மாரகஞ் செய்யுமென ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டது. வெள்ளி பிறக்கும் போது மாரகஸ்தானத்திலிருப்பதால் மூன்றாவது ஏழரைச்சனி வெள்ளியினை மாரகச் சனியாகின்றது. "இராசிப் பலன்கள்" விற்பனையாகின்றன. சத்யா— கட்டுடை. (கி-83)

### 40 குடும்பங்களுக்கு

## திருமணப் பதிவு

(உடுவில்)

வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம், சுன்னாகம் தெற்கு கலைவாணி சனசமூக நிலையப் பகுதியில் இதுவரை திருமணப் பதிவு செய்யாதிருந்த 40 குடும்பங்களுக்கு இலவச திருமணப் பதிவு செய்துவைத்தது. திருமணப் பதிவாளர் திரு. அன்னலிங்கம் இவர்களுக்கான பதிவினை மேற்கொண்டார். (109)

## திருட்டு

(அரியாலை)

யாழ். கதிற்றல் வீதியிலுள்ள ச. இராசரத்தினம் வீட்டில் புகுந்த திருடர்கள், அங்கிருந்த அலுமினியப் பாத்திரங்களைத் திருடிச் சென்றனர். (59

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உபயோகிப்பதற்கு 5KVA க்கு மேற்பட்ட வலுவுள்ள தனி அவத்தை / மூன்று அவத்தை (Phase) மின் பிறப்பாக்கிகள் வாடகைக்கு தேவைப்படுகின்றன.

வைத்திருப்போர் 1993-05-11 பிற்பகல் 2.00 மணிக்கு பல்கலைக்கழக துணைவேந்தருடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
த. பெ. இல. 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(ஏ-3110)

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையில் யாழ். றோட்டறிக்கழகத்தினால் நடாத்தப்பெற்ற ஆங்கில, தமிழ்ப் பேச்சுப்போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் வைபவம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (சு)

0 0 0

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தை ஸ்தாபித்தவருடைய ஞாபகார்த்ததினமான இன்று 8ம் திகதி செஞ்சிலுவைத் தொண்டர்கள் இரத்ததானம் செய்யும்படி இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை கேட்டுக்கொள்கிறது.

உறுப்பினர்கள், தொண்டர்கள், அன்பர்கள் இரத்ததானம் செய்ய விரும்பின் யாழ் கிளையுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

0 0 0 0

(தாளையடி)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் மாதாந்த பொதுக்கூட்டம் இன்று 8ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் கலைமகள் அலுவலக ஹென்றி டுனண்ட் மண்டபத்தில் யாழ். கிளை தலைவர் இ. சிங்கராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது. (163)

0 0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேடகூட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை பி. ப. 3-30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

அடுத்த சனிக்கிழமை இடம் பெறவுள்ள பேரவையின் கொடித்தினம் பற்றி இங்கு ஆராயப்படும். (154)

0 0 0

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட அதிபர்கள் கழக வருடாந்த ஒன்றுகூடலும் சேவைநலம் பாராட்டும் இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் கழகத்தலைவர் சைவப் புலவர் சு. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் தி. துரைலிங்கம் பிரதமவிருந்தினராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. அருளானந்தம், ஆ. கனகசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள். (139)

0 0 0

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் சங்கம் நடாத்தும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி இன்று 8ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரியில் நடைபெறவுள்ளது. (7)

## இராசி பலன்

08-05-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு சித்திரை 25)

துதியை காலை 6-57 வரை கேட்டை பி. இ. 4.-55 வரை சித்தயோகம் இராகுகாலம் காலை 8.55 முதல் 10.25 வரை சுபநேரம் பகல் 2.55 முதல் 4.35 வரை

மேடம்:- குடும்பத்தொல்லை, மனக்கசப்பு, அநாகரிகசெயல்

இடபம்:- சமாதானதீர்வு, உறவினர் ஆதரவு, பயணம்.

மிதுனம்:- சேசம்பேறிதனம், காரிய வெற்றி, முயற்சி பலிதம்

கடகம்:- பிடிவாதகுணம், தொழில் சிரமம், குழப்பம்.

சிங்கம்:- மேலதிகாரிகள் துன்பம், அதிகயோசனை, பணமுடை.

கன்னி:- தொழில் அனுகூலம், எதிர்பார்த்த மாற்றம், பாராட்டு.

துலாம்:- நேர்மை தவறுதல். கடன் சுமை, மனகுரோதம்.

விருச்சிகம்:- தொழில் லாபம்: அதிகமுதலீடு, குடும்ப மகிழ்ச்சி.

தனுசு:- தேவையற்றபகை, கடும்சினம், இரத்தமுத்தம்.

மகரம்:- காரிய சித்தி, தொழில் சிறப்பு, நண்பர் உதவி.

கும்பம்:- சுபகாரியசெலவு, சகோதரி பெருமை, பொது சன உதவி.

மீனம்:- மன எரிச்சல். தொழில் நஷ்டம், ஏமாற்றம்.

— ஜோஸ்யர்

### 1993ம் ஆண்டு வதிவிட

## வேளாண்மை போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

1993 ஆண்டு வதிவிட வேளாண்மைப் போட்டி முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. இப்போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்:

ஆறுதல் பரிசு: சின்னையா வைத்தியகுரர் தாளையடி. ஆழ்வாப்பிள்ளை யோகநாதன் தாளையடி. ஏரம்பு செல்வரத்தினம் அம்பலை. பரிமேலழகர் தயானந்தன் செம்பியன்பற்று தெற்கு, முத்தையா திருச்செல்வம் செம்பியன்பற்று தெற்கு. ராசா இராசபாக்கியம் நாகர்கோவில் தெற்கு. பொன் கிட்டினன் குடத்தனை மேற்கு. நடராஜா சுந்தரம் ஜெபக்குமார் செம்பியன்பற்று தெற்கு. பொன்னம்பலம் ஜானகி குடத்தனை கிழக்கு. விஜயரத்தினம் ரவிக்குமார் நாகர்கோவில் தெற்கு.

பளை வட்டம்: 1. முத்தையா சின்னத்துரை பளை, 2. ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் பளை, 3. கிருஸ்ணன் ராசரத்தினம் பளை.

ஆறுதல் பரிசு: முத்தையா பொன்னுத்துரை பளை. சேனாதிராசா செல்வபோகன் பளை, நமசிவாயம் சின்னத்துரை பளை. இளையதம்பி குமாரசாமி பேராவில், சிதம்பரநாதன் கனகசிங்கம் மாசார். குமாரசாமி ராஜேஸ்வரி முகமாலை பளை, குமாரசாமி ரவீந்திரன் பெரிய பளை பளை, இராமச்சந்திரன் ராமகுமார் பெரிய பளை பளை. சின்னத்தம்பி சச்சிதானந்தம் முல்லையடி பளை வேலுப்பிள்ளை துரைசிங்கம் பளை.

கொடிகாமம் வட்டம்: 1. இராசையா கலாவதி, கொடிகாமம், 2. ஆனந்தகிருஷ்ணா, மிருசுவில். 3. சின்னையா கந்தசாமி, வரணி.

ஆறுதல் பரிசு: பழனி ஞானமகாராசா. கெற்பலி. கோவிந்தன் சின்னத்தம்பி, வரணி, தம்பு கந்தையா, கொடிகாமம் செல்வன் வல்லிபுரம். கெற்பலி நல்லதம்பி கனகலிங்கம். மிருசுவில் வைத்திலிங்கம் சரவணமுத்து ஓட்டங்கேணி. கொடிகாமம் தெற்கு. மணி ராமநாதன், கெற்பலி. சின்னையா நடராஜா, கச்சாய் தெற்கு. வேலாயுதம் பாலச்சந்திரன். மிருசுவில், ஆசீர்வாதம் ஸ்டம்பதி. கொடிகாமம்.

சாவகச்சேரி வட்டம்: 1. சின்னப்பொடியன் இரத்தினம் - கைதடி வடக்கு, 2 விஜயமூர்த்தி வேலும் மயிலும், மீசாலை கிழக்கு, 3. நடராசா அருட்சோதிவர்மன், சங்கத்தானை.

ஆறுதல் பரிசு: திருஞானசம்பந்தன் நிதர்சன் நாவற்குழி கைதடி. நாகமணி சண்முகம் மறவன்புலோ சாவகச்சேரி, இராமலிங்கம் செல்லையா கைதடி மேற்கு. கந்தையா நடராசா கைதடி, குமாரசாமி ஜெயமுருகன் மீசாலை கிழக்கு. கந்தையா பாலமுருகன் மீசாலை கிழக்கு, கனகசபை தெய்வேந்திரன் மீசாலை கிழக்கு, வீ. ஜெயசிங்கம் பெரிய மாவடி சாவகச்சேரி நடராஜா நந்தகுமார் மீசாலை கிழக்கு, பரமானந்ததேவி மயில்வாகனம் கைதடி மத்தி.

## தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணிவரையும் மீட்பு நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்பு நிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

## நன்கொடை பணம்

(கொழும்புத்துறை)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழ் செயல்பட்டு வரும் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்குக் கடந்த 1992 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி அமைச்சின் அரச நன்கொடைப் பணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள் யாவும் தமது நிலைச் செயற்பாடுகள் சம்பந்தமான சகல ஆவணங்களையும் எதிர்வரும் 15ம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் வலி வடக்கு பிரதேச சபை காரியாலயத்தில் சமர்ப்பித்து அரச நன்கொடைப் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வலி - வடக்கு பிரதேசசபைச் செயலாளர் திரு. எஸ். இராசசிங்கம் தெரிவித்துள்ளார். (154)

## துலா பயன்பாடு அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

எமது பாரம்பரிய முறையின்படி துலா-பட்டைமூலம் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தொண்டைமானாறு, சுளிபுரம், கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், உரும்பராய்ப்பகுதி விவசாயிகள் செய்யத்தொடங்கியுள்ளனர்.

இதற்காக தோட்டப்பகுதிகளிலும், வயல் பகுதிகளிலும் துலா அமைக்கும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர். தற்போது மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடும், மின்சாரமும் இன்மையால் துலாவின் அவசியம் உணரப்பட்டுள்ளது. (154)

## அறிவித்தல்

### வ. இ. ச. சபை

### அறிமுறைப் பரீட்சை-1993

நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக 1993-05-15, 1993-05-16 ஆகிய இரு தினங்களில் நடைபெறவிருந்த மேற்படி சபையின் அறிமுறைப் பரீட்சை மறு அறிவித்தல்வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை தேர்வுநாடிகளுக்கு அறியத்தருகிறேன்.

இ. சுந்தரலிங்கம்,
யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளரும்,
வ. இ. ச. சபைத் தலைவரும்.

(எ-3111)

### தீவகம் தம்பாட்டி

### காந்திஜி நாடக மன்றத்தினர்

பெருமையுடன் வழங்கும்

## மாவீரன் பண்டாரவன்னியன்

(வரலாறு தென்மோடி நாட்டுக்கூத்து)

இடம்: நாவாந்துறை சென்மேரிஸ் கலை அரங்கம்.

காலம்: 08-05-93 (இன்று) மாலை 7-00 மணி.

விளம்பரம் அன்பளிப்பு } வே. கதிர்காமு குடும்பத்தினர்

(கி-92)

## தேவை

பத்திரிகைக் காரியாலயத்தில் விளம்பரம், கணக்கு, விநியோகம் ஆகிய பகுதிகளில் பொறுப்புடன் கடமையாற்றத் தகுதியும் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்: க. பொ. த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது: 21—35 வரை.

விண்ணப்ப முடிவு திகதி: 14-5-93.

விண்ணப்பிக்கவும்:

விளம்பர இல:- A 3113
மே/பா. ஈழநாடு
யாழ்ப்பாணம்.

(எ- 3113)

யாழ்ப்பாணம்

# சிறிமா, அநுரா, காமினியும் கொலைப்பட்டியலில் உள்ளனர்

## டி. யு. என். எவ். பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

எதிர்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அவரின் மகன் அநுரா பண்டாரநாயக்கா, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தலைவர் காமினி திஸநாயக்கா உட்பட எதிர்கட்சி தலைவர்கள் பலரும் கொலைப்பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள்.

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பேச்சாளர் டாக்டர் விக்கிரம வீரசூரிய தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் மேலும் கூறுகையில்:

கொலைப்பட்டியலில் உள்ள ஆளும் கட்சி, எதிர்கட்சி முக்கியஸ்தர்களின் பெயர் விபரம் பற்றி எனக்கு தகவல் ஒன்று கிடைத்துள்ளது. அந்த தகவலை தந்தவர், கொலைப்பட்டியலில் உள்ள எதிரணி தலைவர்களின் விபரங்களை கூறியுள்ளார்.

இக்கொலைப்பட்டியலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. அநுரா பண்டார நாயக்கா, திருமதி சந்திரிகாகுமாரணதுங்க, திரு காமினி திஸநாயக்கா, திரு. ஜி. எம். பிரேமச்சந்திரா ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இப்பட்டியலில் ஆளும் கட்சி தலைவர், தலைவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இந்த விவகாரத்தை நான் அரசியல் கட்சி தலைவர்கள் தேர்தல் ஆணையாளருடன் நடாத்திய மாநாட்டில் வெளியிட்டிருந்தேன். இம் மாநாட்டில் பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ற் பெரேராவும் இருந்தார்.

இது குறித்து அறிக்கை ஒன்று தருமாறு சி ஐ டி. பொலிஸார் என்னை கேட்டனர். இது பற்றி சுமார் இரண்டு மணித்தியாலங்கள் அவர்களிடம் எனது வாக்கு மூலத்தை கொடுத்தேன்.

வேட்பாளர்களுக்கு போதிய பாதுகாப்பும் ஆயுதங்களும் வெடிமருந்துகளும் வழங்க வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார். (சி)

## காமினி கட்சி, ஐ. தே. க. இணையுமா?

# கேள்விக்கு ரணில் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசவின் கொலைக்கு பின்னர் ஆளும் ஐ.தே.க வுடன் காமினியின் ஜனநாயக ஐக்கிய தேசியமுன்னணி இணையலாமென்ற ஊகங்களை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா நிராகரித்துள்ளார்.

பத்திரிகையாளர்கள் இது பற்றிக் கேட்டபோது அவர் கூறுகையில்: ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி ஒரு கட்சி. அக்கட்சி சிறிமாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. அக்கட்சியுடன் இணைவதென்ற எண்ணம் ஐ. தே. க. விடம் இல்லை என்றார்.

டி. யு. என். எவ். வின் ஒரு பகுதியினர் ஐ. தே. க. வுடன் சேருவர் எனக்கூறப்படுகிறதே எனக்கேட்ட போது, நான் அவ்வாறு கேள்விப்படவில்லை என்று கூறினார். மேலும் தங்கள் கட்சிக்குள் தலைமைத்துவ போட்டி எழவில்லையென்றும், புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது குறித்து நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கலந்து கொள்ளவில்லையென்றும் கூறினார். (சி)

## ஜனாதிபதியின் கொலை ——

# சர்வாதிகார ஜனாதிபதிமுறை ஒழியவேண்டும் என்பதை கூறுகிறது

(கொழும்பு)

"காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா எந்த விதமான அரசியல், சமூக பொருளாதாரத்தை ஆதரித்தாரோ அதற்கே அவர் பலியானார்"

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணம் குறித்து நவசமசமாஜ கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: இந்த ஆட்சியில் ஏதேச்சதிகாரம், பயங்கரவாதம், கடத்தல்காரர், பதுங்கல் பேர்வழிகளின் அதிகரிப்பே காணப்பட்டது. காணாமற் போதல், கொலைகள் எல்லாம் சர்வசாதாரணம்.

சர்வாதிகார ஜனாதிபதி முறை ஒழியவேண்டுமென்பதையே இந்தப் படுகொலையை விட்டு மக்கள் மனதில் எழுந்த உணர்வு பிரதிபலிக்கிறது.

எனவே வடக்கு-கிழக்கு யுத்தம் உடன் நிறுத்தப்பட வேண்டும். அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். அவசரகாலநிலை உடன் நீக்கவேண்டும். சனநாயக முறையில் நடக்கும் எதிர்ப்புகளுக்கும் சுதந்திரம் வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (கே-வி)

## அடையாள அட்டைகள் புதிய முறையில் விநியோகம்

(கொழும்பு)

மோசடி முறையில் மாற்றியமைக்க முடியாத அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கையில் ஆட்பதிவுத் திணைக்களம் ஈடுபட்டு வருகிறது.

இதற்கென நவீன இயந்திரங்கள் கொண்டு வரப்படவுள்ளன. இந்த இயந்திரங்களின் செலவு 5 கோடி ரூபாவாகும்.

இந்தப் புதிய முறையில் அடையாள அட்டைகள் வழங்கிய பின் மோசடி முறையில் அடையாள அட்டைகளை மாற்றியமைக்க முடியாதென்றும் தற்போது பல தில்லுமுல்லுகள் நடைபெற்றுவருவதாகவும் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். (கே-வி)

## மஹோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் மாணிக்கப்பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. (83)

## கலை விழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் கலைவிழா, மேற்படி வித்தியாலயத்தில் நாளை 9ந் திகதி மாலை நடைபெறும்.

இவ்விழாவில் முன்னாள் கல்வி அதிகாரி மு. சிவானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## நஷ்ட ஈடு வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

1990ம் ஆண்டு தொடக்கம் வட மாகாண ஓய்வூதியர் சங்கத்தின் விடாமுயற்சியாக, தற்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க அரசு தீர்மானித்திருப்பதாக மேற்படி சங்கத்தின் தலைவர் வி. எஸ். இராமநாதன் தெரிவித்துள்ளார்.

எமது சங்கம் தொடர்ந்தும் நடவடிக்கைகளை எடுத்து, 'ரேபியா' மூலம் இதனைப் பெறுவதற்கு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (சி)

## புற்றுநோய் தடுப்பு துண்டு பிரசுரம் விநியோகம்

(கொழும்புத்துறை)

புற்றுநோயைத் தவிர்க்க முடியுமா? என்ற தலைப்பில், வட மாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கம் இலவச துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் புற்று நோய் என்றால் என்ன? ஆரம்ப அறிகுறிகள், புற்றுநோயைத் எப்படித் தவிர்த்துக் கொள்ளலாம்? வாய்ப் புற்று நோயை எமது நாட்டில் எப்படித் தடுக்கலாம்? என்ற விபரங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

உடலின் சகல பாகங்களையும் தாக்கும் இக்கொடிய நோயை ஆரம்பத்தில் இனம் காண்பது மிகவும் அவசியம். இதன் மூலம் முற்றாக இந்த நோயைத் தவிர்க்கலாம். மக்கள் மத்தியில், இந்நோய் சம்பந்தமான அறிவு வளர்க்கப்படல் வேண்டும். மேலும் வேண்டிய தகவல்களுக்கு, வெளிக்களச் சுகாதார ஊழியர்களையோ அல்லது புற்று நோய்த் தடுப்புச் சங்கத்தையோ நேரில் நாடவும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (154-வி)

## ஜனாதிபதி விஜயதுங்கவின் வாழ்க்கை குறிப்பு

இலங்கையின் புதிய ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்க 1922ம் ஆண்டு கண்டியிலுள்ள பொல்தெனா என்ற இடத்தில் பிறந்தார்.

1946 ம் ஆண்டு ஐ. தே. க வில்சேர்ந்த இவர் தெனிநுவர தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக 1965 ல் தெரிவானார். 1977 ல் இருந்து 1979 ம் ஆண்டு வரை தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர், மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர், தபால் தொலை தொடர்புகள் அமைச்சர், மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சராயிருந்தார். விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை அமைச்சராகவும் உணவுத்துறை அமைச்சராகவும் இருந்தார்.

1988-ம் ஆண்டு வடமேல் மாகாண ஆளுநராகபதவியேற்றார். 1989 ம் ஆண்டு நிதியமைச்சராகவும், 98 ம் ஆண்டின் பிற்பகுதியில் நாட்டின் பிரதமரானதுடன் நிதியமைச்சர் பதவியையும் ஏற்றார்,

1990ம் ஆண்டு தொழிற் பயிற்சி அமைச்சர் என்ற பதவியும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்பின் 1991ம் ஆண்டு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் கொலையைத் தொடர்ந்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பதவியையும் ஏற்றார்.

அரசியலில் பிரவேசிக்க முன் 1942ம் ஆண்டு உலக யுத்தம் நடைபெற்ற காலத்தில் கூட்டுறவுத் திணைக்களத்தில் சேர்ந்து கடமையாற்றினர். கூட்டுறவு பரிசோதகர்கள் தொழிசங்கத்தை அமைத்து அதன் மூலம் தலைவராகவும் இருந்தார்.

பல்வேறு சர்வதேச கருத்தரங்குகளில் இவர் கலந்து கொண்டார். பல்வேறு அமைச்சுகளுக்கு பொறுப்பானவர் என்ற வகையிலும் பிரதமர் என்ற ரீதியிலும் இவர் கருத்தரங்குகளிலும் மாநாடுகளிலும் பல நாடுகளில் பங்குபற்றியிருந்தார். (வி)

## இனப் பிரச்னைக்கு தீர்வு காணவேண்டும்

(கொழும்பு)

ஜனாதிபதியின் கொலையை எவரும் தங்கள் அற்ப லாபத்திற்காக பயன்படுத்தக்கூடாதென தேசிய கிறிஸ்தவ சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில், சனநாயகம், நீதி சமத்துவம் நாட்டில் நிலவ வேண்டுமாயின் இனப்பிரச்னைக்கு தீர்வுகண்டு சிறுபான்மையோர் உரிமை வழங்கப்படுவதோடு சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்துக்கு சகலரும் பாடுபட வேண்டுமென்றும்,

இதற்கு சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைந்து சமாதானமாக பேசி தீர்வு காணுமாறும் வேண்டப்பட்டுள்ளது. (கே-வி)

# ஒரே வீட்டில் 3 சைக்கிள் திருட்டு

(பண்டத்தரிப்பு)

நள்ளிரவு நேரத்தில் வீடு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த எஸ். சோமேஸ்வரன் என்பவரது வீட்டில் கடந்த 6ம் தேதி வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவத்தில் இரண்டு 'ரலி' சைக்கிள்களும், ஒரு 'ஹீரோ' சைக்கிளும் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து யாழ். காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (72)

## ஈழகேசரி நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஈழகேசரி நா. பொன்னையாவின் 42வது நினைவு தினத்தை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடாத்தவுள்ளார்கள்.

"ஈழகேசரியும் குழந்தை இலக்கியமும்" என்ற தலைப்பில் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா நிகழ்த்துவார். (அ)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபையும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து ஓய்வு பெற்ற அதிபர் வி. சிவசரவணபவனுக்கு பாராட்டு விழா ஒன்றை, நாளை 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30மணிக்கு நடத்தவுள்ளனர். (அ)

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் 4வது சுற்று மண்ணெண்ணை விநியோகம் நடைபெற்று வருகின்றது. இவ்விநியோகம் சங்கத்துடன் இணைக்கப்பட்ட உலர் உணவு அட்டை ஒன்றுக்கு 2 லீற்றர் வீதம் வழங்கப்படும். எண்ணை விநியோகம் இம்மாதம் 15ந் திகதி நிறைவு செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## முதலுதவி சிகிச்சை

(உடுவில்)

போர்க்காலங்களில் பாதிக்கப்படும் மக்களுக்கு முதலுதவி அளிப்பது சிகிச்சை அளிப்பது பற்றி பரியோவான் முதலுதவிப் படைப் பிரிவினருக்கு யாழ்ப்பாண ஆணையாளர் போஜனால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இணுவில் மத்திய கல்லூரியில் நடந்த கூட்டத்தில் நூற்றிஐம்பது பரியோவான் முதலுதவிப்படை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (109)

# பூட்டான் ஹெலி விபத்தில் அமைதிப்படை அதிகாரியுடன் ஒன்பது இராணுவத்தினர் பலி

(திம்பு)

பூட்டானில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்து ஒன்றில் அதில் பயணம் செய்த இந்திய கிழக்குப் பிராந்திய படைத் தலைமை அதிகாரியும் அவரது மனைவி உட்பட 9 அதிகாரிகளும் பலியாகினர்.

விபத்துக்கான காரணம் குறித்து இதுவரையில் தகவல் எதுவும் வெளிவரவில்லையாயினும் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக பூட்டான் அரசு அறிவித்தது.

இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதியில் இந்திய இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் இவர் முக்கியபங்கு வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)

# தேர்தல் ஆணையாளரை எதிரணி சந்திப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதிநிதிகள் நேற்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவை சந்தித்தனர்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தைச் சாதகமாக்கிக்கொண்டு அரசு ரூபவாஹினியையும் அரசு சார்பான பத்திரிகைகளையும் தனக்கு ஏதுவாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்தனர்.

பிரேமதாசாவின் மரணம் தொடர்பாக தொகுக்கப்பட்ட பதாகைகளையும் மாகாணசபைத் தேர்தலில் தமக்கு பிரசாரம் தேடும் விதமாகவே அரசு பயன்படுத்தி வருகிறது.

எனவே அவற்றை உடனே அப்புறப்படுத்த தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என சம்பந்தப்பட்ட கட்சியின் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர். (இ)

# பிரேமாவின் இறுதி ஊர்வலத்தில் குறைந்தளவு மக்களே கலந்து கொண்டனர்

(கொழும்பு)

எதிர்பார்க்கப்பட்டதைவிட குறைவான மக்களே மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் வன்செயல் சம்பவங்கள் எதுவும் நேற்று கொழும்பு நகரில் இடம்பெறவில்லையென்றும் எனினும் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் நேற்றும் தொடர்ந்ததாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (க-இ)

# மோட்டார் ஊர்திப்பதிவு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா மோட்டார் ஊர்திப்பதிவுச்சான்றிதழ் இறக்குமதிச்சிட்டை உள்ளோர்களை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுகள் இன்றுடன் முடிவடைந்து விட்டன

10-05-93 இலிருந்து மோட்டார் ஊர்திப்பதிவுச்சான்றிதழ் இல்லாத அல்லது வேறு சான்றிதழ் இல்லாதவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்டவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என தமிழீழ விடுதலைப்புலிகளின் போக்குவரத்து பிரிவு அறிவித்துள்ளது.

# தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கை கட்டுப்படுத்தப்படும் - ராவ்

(சென்னை)

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என இந்தியப்பிரதமர் பி. வி. நரசிம்மராவ் சென்னை விமான நிலையத்தில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார்.

காஞ்சிகாமகோடிபீடத்தை தரிசிப்பதற்காக தமிழகம் விஜயம்செய்த பிரதமர் நரசிம்மராவை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி உட்பட பல பிரமுகர்கள் வரவேற்றனர்.

அ. தி. மு. க. இந்திரா காங்கிரஸ் உறவுமுறிவடைந்த பின்னர் பிரதமர் மேற்கொள்ளும் முதல் தமிழக விஜயம் இதுவென தெரிவிக்கப்பட்டது. (க-இ)

# கொழும்பில் வெசாக் வைபவங்கள் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

வெசாக் கொண்டாட்டங்கள் நேற்று முதல் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கொண்டாடப்படுவதாக அரசு அறிவித்தது.

கடந்த 5-ந் திகதி கொண்டாடப்படவிருந்த வெசாக் கொண்டாட்டங்கள் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்தினால் பின்போடப்பட்டிருந்தது.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த பத்துக்கும் மேற்பட்ட வெசாக் பந்தல்களை நேற்று முதல் பொது மக்கள் பார்வையிட்டனர். (வி-இ)

# ஹேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுவதே அவரது முக்கிய நோக்கமாக இருக்கும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

# விஜேதுங்க மென் போக்கை கடைப்பிடிப்பார்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாக பதவி பேற்ற டி. பி. விஜேதுங்க அரசு இதுவரையில் ஐக்கிய தேசியக்கட்சி கடைப்பிடித்து வந்த கடும்போக்கை கைவிடப்பட்டு மென்மையான போக்கு கடைப்பிடிக்கலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு-கிழக்கு விவகாரத்தை பொறுத்த வரையில் அவர் மென்மையான போக்கு கடைப்பிடிக்கப்படலாம் என்னும் ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-இ)

# நூலகவியல் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலக சங்கத்தினால் நடாத்தப்படும் 1990-ம் ஆண்டு பதிவு செய்த மாணவர்களுக்கான நூலகவியல் வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (159-இ)

# கிளாலியில் பீரங்கித் தாக்கு

(எழுதுமட்டுவாள்)

கிளாலிக் கடற்பரப்பிலிருந்து கடற்படையினர் கிளாலிக் கரை, அல்லிப்பளைப் பகுதிகளை நோக்கி நேற்று பீரங்கித் தாக்குதலை நடத்தினர். இதன் சேதவிபரங்கள் பற்றி தகவல் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. (179)

# வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நான் மேற்கொள்ள இருக்கும் முயற்சிகளுக்கு இந்த நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும், மக்களும் தமது பூரண ஒத்துழைப்பை எனக்கு வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார். (வி-இ)

# தேர்தலை கண்காணிக்க சர்வதேச அவதானக்குழு இலங்கை வருகிறது

(கொழும்பு)

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலை கண்காணிப்பதற்காக சர்வதேச அவதானிகள் குழு ஒன்று விரைவில் இலங்கை வரவுள்ளது

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, இந்தியா, நேபாளம், பாகிஸ்தான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் இதன் பொருட்டு வரவுள்ளனர்.

இக்குழு தேர்தல் சுதந்திரமாக நடைபெறுகின்றதா என்பதனை அவதானிப்பதோடு தேர்தல் தொடர்பான சகல விடயங்களையும் அவதானிக்கும். (க-இ)

# விஜேதுங்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழிமொழிந்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்ன இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் ஜனாதிபதியாக திரு டி. பி. விஜேதுங்க போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அறிவித்தார்.

நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் பிரதம நீதியரசர் ஜி பி. எஸ். டி. சில்வா முன்னிலையில் ஜனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (க-இ)

# அமைச்சரவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்களின் பதவியேற்பு வைபவம் நேற்று நடைபெற்றது. எனினும் அமைச்சரவையில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை. பழைய பதவிகளை வகித்த அமைச்சர்கள் மீண்டும் அதே அமைச்சுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். (க-இ)

# தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டை ஐக்கியப்படுத்துவதே நான் மேற்கொள்ளவுள்ள முக்கிய பணியாகும்.

அதிகார வெறிக்கும் சகிப்புத் தன்மை இல்லாமைக்கும் இடமளியாது புதிய சமூக அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் நான் பாடுபடுவேன் என்றார். (க-இ)

# எதிரணியினர் மீது தாக்குதல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையை அடுத்து தென்பகுதி எதிரணி அரசியல் கட்சி பிரமுகர்கள் மீது நெருக்குதல்களும் தாக்குதல்களும் அதிகரித்துவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தறையில் எதிரணி கட்சிப் பிரமுகர் ஒருவர் அண்மையில் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்றுகுறித்து தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இத்தகைய சம்பவங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் எனவும் எதிரணியினர் தேர்தல் ஆணையாளரிடம் அச்சம் தெரிவித்துள்ளனர். (இ)

# வவுனியாப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளன.

இத்தாக்குதலினால் மேற்படி பாடசாலையின் தளபாடங்கள் சிறிதளவு சேதமடைந்தும் உள்ளன மாகியுள்ளதுடன் நான்கு வீடுகள் முற்றாக சேதமடைந்தும் உள்ளன.

இத்தாக்குதலினால் ஏற்பட்ட உயிரழப்புக்கள் குறித்தோ அல்லது காயமடைந்தோர் பற்றிய விபரங்களோ எதுவும் இதுவரை தெரியவரவில்லை. (க-இ)

# ரணில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியில் கல்வி கற்றபின்பு சட்டத்தரணியானார். 1977-ம் ஆண்டு பியகம தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. ரணில் விக்கிரமசிங்க வெளிவிவகார பிரதி அமைச்சராக நியமனம் பெற்றார்.

1983ம் ஆண்டு இளைஞர் விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1980-ம் ஆண்டு கல்வி அமைச்சராக நியமனம் பெற்றார். 1989ம் ஆண்டு கைத்தொழில் அமைச்சராக நியமனம் பெற்றதுடன் சபையின் முதல்வராகவும் நியமிக்கப்பட்டார்.

1990ம் ஆண்டுகைத்தொழில் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சராகவும் நியமனம் பெற்றார். (வி)

# தமிழர் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றேன்.

அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடாத்துவதாயின் முதலில் தலைவர் பிரபாகரனின் பிரதிநிதிகளுடன் தான் பேச்சுக்கள் நடாத்தப்படுமென்ற புலிகளின் முந்திய நிபந்தனைகளை தான் நிராகரிப்பதாக ஜனாதிபதி விஜேதுங்க கூறினார்.

இரண்டாம், மூன்றும், நான்காம் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடாத்துவதால் பேச்சுக்கள் நீடிக்குமே தவிர ஒரு தீர்க்கமான முடிவை மேற்கொள்ள முடியாது. தலைவர்கள் தலைவர்களுடன்தான் பேச வேண்டும்.

ஆகவே தலைவர்களே நேரடியாகவே சந்தித்து பேச்சுக்களை நடாத்தினால் விரைவில் நல்ல முடிவுகளைக்காண முடியும் என்று ஜனாதிபதி விஜேதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (வி-இ)

# அவசரகால

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநாட்டில் நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு மீண்டும் உயிர்கொடுக்க வேண்டும்.

ஜனநாயகத்துக்கு பாதகமாக அமைந்திருக்கும் அவசரகால சட்டவிதிகளை எமது சட்டப் புத்தகங்களிலிருந்து நீக்கிவிட வேண்டும். (இ)

# ஜே. ஆர். பிரேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை வெளியிட்டுள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கவலைதெரிவித்தார். (க-இ)

# ஸ்கொட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலை குறித்து இவர்கள் விசாரணைகள் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

ஸ்கொட்லண்ட் யார்ட்குழு நாடு திரும்பியது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று அறிவித்தது. (க-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மேற்கு வீதி, 08-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under licence Number [B/10926/B